TEXT **Fairoza Mansor**
PHOTO **Wilson Pang**

# PASS IT ON > DON'T THROW YOUR USED ITEMS AWAY!

Fulfilling the needs of families by sending the items right to their doorsteps.



Mr Manogaran (extreme right) with his new washing machine, thanks to Pass-It-On and the staff from The Helping Hand.

A microwave oven and a standing fan are common household appliances for most of us. For some families however, these may be unaffordable. Thankfully, they can turn to Pass-It-On, which is supported by Central Singapore CDC. It is a non-profit website which distributes donated used items ranging from furniture to electrical appliances that are still in good condition. The Helping Hand (THH) — a halfway house that re-integrates ex-offenders into society — helps to deliver the items to the recipients' homes.

## A GIFT FROM THE HEART

Through Pass-It-On, Telok Blangah resident Mr Manogaran R Gavindaraju, 56, became the owner of a washing machine. "We've always lived simply, but it's a struggle when things break down and require replacement. So I'm really grateful to Pass-It-On for lending me a hand," Mr Manogaran told *VOICES*. "The THH staff didn't just deliver the washing machine, they also wired it properly and taught me how to use it."

THH staff member Mr Moses Jagayaraja, a former resident of the halfway house and now a counsellor, was just as happy to be of help. "Rehabilitation requires continual effort, and getting busy with the deliveries with my colleagues helps me stay on track," said the 44 year-old. "It is a meaningful project and I'm glad to be a part of it."

"We came on board because Pass-It-On is for a good cause and benefits those in need. THH is already doing deliveries as part of our services, so why not chip in?" said CEO of THH, Mr Chia Shih Sheung. "Besides, we want to encourage ex-offenders to give back to the community."

Voluntary Welfare Organisations (VWOs) registered with Pass-It-On can help clients put up their wish list on the website and donors can fulfill their wish by donating the requested items. As part of THH's community service involvement, each delivery is heavily discounted at $30 per trip. This cost is borne by the donor or the VWO which is helping the low-income family.



Mr Moses (extreme right) and THH staff helping to wire up the washing machine.

> "We came on board because Pass-It-On is a meaningful project. Not only does it benefit the needy residents, it also promotes recycling and reduces wastage"
>
> **Mr Chia Shih Sheung, CEO of The Helping Hand**



## How you can help

**4 easy steps to donate your used items (in good condition) or grant a wish: Log on to www.passiton.org.sg**

### STEP 1 — Grant A Wish
விருப்பத்தை நிறைவேற்ற

**Click on 'Grant A Wish'**
'விருப்பத்தை நிறைவேற்ற' என்பதை அழுத்தவும்

### STEP 2
**Click on 'I can Donate!' & fill in donation details**
'நன்கொடை வழங்குகிறேன்' என்பதை அழுத்தி விவரங்களைப் பதிவு செய்யுங்கள்

I can Donate!

### STEP 1 — Donate Items
பிறருக்குக் கொடுங்கள்!

**Click on 'Donate Item' & fill in donation details**
'பொருள்கள் நன்கொடை' என்பதை அழுத்தி விவரங்களைப் பதிவு செய்யுங்கள்

### STEP 2
**Social Worker from VWO reserves your item**
தொண்டூழிய அமைப்பின் சமூக ஊழியர் உங்களுக்கான பொருளை ஒதுக்கி வைப்பார்

Reserve

### STEP 3
**Social Worker from VWO contacts you for collection**
தொண்டூழிய அமைப்பின் சமூக ஊழியர் உங்களைத் தொடர்பு கொள்வார்



### STEP 4
**Pass It On!**
பிறருக்குக் கொடுங்கள்!



## பிறருக்குக் கொடுங்கள் > நீங்கள் பயன்படுத்தியவற்றைத் தூக்கி எறியாதீர்கள்!

### விட்டிற்கே பொருள்களை அனுப்பி குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வது

நுண்ணலை அடுப்பு, நிற்கும் காற்றாடி போன்றவை நம்மில் பலருக்கு சாதாரண வீட்டுப் பொருள்கள். சில குடும்பங்களுக்கு அவற்றை வாங்கும் வசதி இருக்காது. நல்ல வேளையாக அவர்கள் மத்திய சிங்கப்பூர் சமூக மேம்பாட்டு மன்றம் ஆதரவளிக்கும் 'பிறருக்குக் கொடுங்கள்' என்ற இணையத் தளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தத் தளம், நல்ல நிலையில் உள்ள மின்னியல் பொருள்கள், அறைகலன்கள் போன்ற நன்கொடையாக வழங்கப்பட்ட பொருள்களை தேவைப்படுவோருக்கு விநியோகம் செய்கிறது. முன்னாள் குற்றவாளிகள் சமூகத்தில் மீண்டும் இணைய உதவும் 'தி ஹெல்ப்பிங் ஹேண்ட்' (THH) என்ற மறுவாழ்வு இல்லத்தின் உறுப்பினர்கள் அந்தப் பொருள்களை தேவைப்படும் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பர்.

### இதயத்திலிருந்து ஒரு பரிசு

இந்தத் திட்டத்தின் மூலம் தெலுக் பிளாங்காவைச் சேர்ந்த 56 வயது மனோகரன் கோவிந்தராஜுவுக்கு ஒரு துவைக்கும் இயந்திரம் கிடைத்தது. "நாங்கள் எப்போதுமே எளிமையாகத்தான் வாழ்வோம். ஆனால் பொருள்கள் பழுதானால் எங்களுக்குச் சிரமம். எனவே 'பிறருக்குக் கொடுங்கள்' திட்டத்திற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன்," என்கிறார் மனோகரன். "THH உறுப்பினர்கள் இயந்திரத்தைக் கொண்டு வந்ததோடு மட்டுமின்றி அதனைப் பொருத்திக் கொடுத்து எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றும் கற்றுக் கொடுத்தனர்," என்று அவர் மேலும் கூறுகிறார். THH இல்லத்தில் முன்பு உதவிபெற்று தற்போது ஆலோசகராக இருக்கும் 44 வயது மோசஸ் சகாயராஜா உதவி செய்வதில் மகிழ்கிறார். "மறுவாழ்வு பெறுவதற்கு தொடர்ச்சியான முயற்சி தேவை. இதுபோன்று பொருள்களைக் கொண்டு சேர்க்கும் பணி நாங்கள் எங்கள் இலக்கிலிருந்து மாறாதிருக்க எங்களுக்கு உதவுகிறது. அர்த்தமுள்ள இந்தத் திட்டத்திற்கு உதவுவதில் எனக்கு மகிழ்ச்சி," என்கிறார் அவர்.

"'பிறருக்குக் கொடுங்கள்' திட்டம் உதவி தேவைப்படுவோருக்கு உதவுவதால் அதில் கலந்து கொள்ள நாங்கள் முடிவெடுத்தோம். பொருள்களை அனுப்பும் சேவையை நாங்கள் முன்பே செய்து வருகிறோம். எனவே இந்தத் திட்டத்திற்கு உதவுவதில் சிரமம் இல்லை. மேலும், முன்னாள் குற்றவாளிகள் சமூகத்துக்குத் திருப்பித் தர ஊக்க மூட்ட விரும்புகிறோம்," என்கிறார் THH இல்லத்தின் தலைமை நிர்வாகி திரு சியா ஷி ஷியுங். 'பிறருக்குக் கொடுங்கள்' திட்டத்தில் தொண்டூழிய சமூகநல அமைப்புகள் பதிந்துகொண்டு, தேவைப்படும் பொருள்களை இணையப் பக்கத்தில் தெரிவிக்கலாம். அந்தப் பட்டியலைப் பார்த்து நன்கொடை வழங்க விரும்புபவர்கள் அவ்வாறு செய்யலாம். THH இல்லத்தின் சமூகச் சேவை பங்களிப்பாக, பொருள்களைக் கொண்டுவரும் ஒவ்வொரு பயணத்துக்கும் அது 30 வெள்ளி மட்டுமே வசூலிக்கிறது. அந்தச் செலவை நன்கொடை வழங்குபவரோ தொண்டூழிய சமூகநல அமைப்போ ஏற்றுக் கொள்ளும்.